MINISTRY OF MANPOWER

ஆலோசனை
(Updated 14 May 2021)

# புலம்பெயர்ந்த இல்லப் பணியாளர்களுக்கான கொவிட்-19 தடுப்பூசி

## நான் எப்போது தடுப்பூசி செலுத்திக் கொள்ள முடியும்?

**>45** 45 வயதுக்கு மேற்பட்ட புலம்பெயர்ந்த இல்லப் பணியாளர்கள் (MDW-கள்) கொவிட்-19 தடுப்பூசிக்காகப் பதிவு செய்துகொண்டு அதைச் செலுத்திக் கொள்ளலாம்.

**<45** மே 2021 -இன் பிற்பகுதியில் இருந்து, 45 வயதிற்குட்பட்ட புலம்பெயர்ந்த இல்லப் பணியாளர்கள் தடுப்பூசி செலுத்திக்கொள்வதற்கான தங்கள் ஆர்வத்தை பதிவு செய்யலாம். நடைமுறையில் உள்ள வயது வரம்புகளின்படி நீங்கள் தகுதிபெறும் போது அழைக்கப்படுவீர்கள்.

## நான் தடுப்பூசி செலுத்திக் கொள்ளலாமா?

கொவிட்-19 தடுப்பூசிகள் கீழ்க்கண்ட நிலைமைகளுடன் உள்ளவர்களுக்கும் ஏற்றவை:

- ✓ நாள்பட்ட நோய் நிலைமைகள் (எ.கா. உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், உயர் இரத்தக்கொழுப்பு, இதய நோய்)
- ✓ மருந்துகள், உணவு அல்லது பூச்சிக்கடிகளுக்குத் தீவிரமல்லாத ஒவ்வாமை எதிர்வினைகள்
- ✓ படைநோய் அல்லது ஆஸ்துமா உள்ளவர்கள்

## நான் ஏன் கொவிட்-19 தடுப்பூசியை செலுத்திக்கொள்ள வேண்டும்?

தடுப்பூசியால்:

- கொவிட்-19 -ஐத் தடுக்கவும், தொற்று பரவலைக் குறைக்கவும் முடியும்.
- அதிக நடவடிக்கைகளைப் பாதுகாப்பாக செய்யத் தொடங்குவதற்கு நம்மை இயலச் செய்யலாம்.
- நமது சுகாதாரப் பராமரிப்பு அமைப்பு அதிக வேலை பளுவினால் திணறுவதைத் தடுக்க முடியும்.
- உங்களையும் மருத்துவக் காரணங்களால் தடுப்பூசி செலுத்திக்கொள்ள முடியாதவர்களையும் பாதுகாக்க முடியும்.

## நான் எவ்வாறு கொவிட்-19 தடுப்பூசி செலுத்திக்கொள்ளப் பதிவுசெய்துகொள்வது

1. உங்கள் ஆர்வத்தை vaccine.gov.sg –இல் பதிவுசெய்யுங்கள்
2. நீங்கள் தகுதிபெறும்போதும், முன்பதிவு செய்வதற்கு இடங்கள் கிடைத்தவுடனும் நீங்கள் ஒரு குறுஞ்செய்தியைப் பெறுவீர்கள்.

உங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து 1800-333-9999 என்ற எண்ணில் சுகாதார அமைச்சின் கொவிட்-19 -க்கான நேரடித் தொலைபேசி எண்ணை அழைக்கவும்.

**தடுப்பூசி செலுத்திக்கொள்வது பாதுகாப்பானது.**
**கொவிட்-19 தடுப்பூசி உங்களுக்கு வழங்கப்படும் போது அதை செலுத்திக் கொள்ளுங்கள்.**